10. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2019–2020, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019–2020 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019–2020 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை @ இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இப்பேரவையின்முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் 6,408.82 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு வழிவகை செய்கின்றன. இவற்றில் 5,732.06 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 676.76 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 9 ஆம் நாளன்று 2019–2020 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் புதுப் பணிகள் மற்றும் புது துணைப் பணிகள் குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாரா செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடுசெய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்தின்கீழ் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தகவல் தொடர்பு தொழில்நுட்ப முயற்சிகளை மேற்கொள்வதற்கும் மற்றும் உபகரணங்களை நிறுவுவதற்கும் 231.07 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் மானியக் கோரிக்கை எண் 43, பள்ளிக் கல்வித் துறை என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்தின்கீழ் இடைநிலைக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு அரசு 160.56 கோடி

@ 651 முதல் 656 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

ரூபாய் கூடுதல் நிதியாக அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் மானியக் கோரிக்கை எண் 43, பள்ளிக் கல்வித் துறை என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குவதற்காக அரசு 123.39 கோடி ரூபாயை கூடுதலாக அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் மானியக் கோரிக்கை எண் 43, பள்ளிக் கல்வித் துறை என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

கடலோர பேரிடர் ஆபத்து குறைப்புத் திட்டத்தின்கீழ் நிகழ்திறன் சூறாவளி மின் வலையமைப்புகளை நிறுவுவதற்காக 113.98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் மானியக் கோரிக்கை எண் 14, எரிசக்தித் துறை என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் மிகவும் பாதிப்படையக்கூடிய பகுதிகளில் நீண்டகால அளவிலான வெள்ளத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ளவும், சேதமடைந்த அரசு கட்டடங்களைப் பழுதுபார்த்து சீரமைக்கவும் அரசு 193.55 கோடி ரூபாய் கூடுதலாக அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் மானியக் கோரிக்கை எண் 51, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

Corona Virus COVID–19 தொற்று நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 60 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் மானியக் கோரிக்கை எண் 51, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

நண்பகல் 12–00

தேசிய ஆயுஷ் குழுமம், தேசிய ஊரக மற்றும் நகர்ப்புற சுகாதார இயக்கங்கள் போன்ற மத்திய அரசின் உதவி பெறும் பல்வேறு திட்டங்களுக்கான மாநில அரசின் பங்குத் தொகையுடன் சேர்த்து 579.32 கோடி ரூபாய் கூடுதலாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 மார்ச் 23

இதற்காக, துணை மதிப்பீடுகளில் 299.93 கோடி ரூபாய் மானியக் கோரிக்கை எண் 19, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் மறு நிதி ஒதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

பல்வேறு அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகள் கொள்முதல் செய்வதற்காக, அரசு 166.94 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இதற்காக, துணை மதிப்பீடுகளில் 153.28 கோடி ரூபாய் மானியக் கோரிக்கை எண் 19, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் மறு நிதி ஒதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

ஐந்து புதிய மாவட்டங்களை உருவாக்குவதற்காகவும், இதர மாவட்ட நிருவாகச் செலவுகளுக்காகவும், அரசு 252.46 கோடி ரூபாயை கூடுதலாக அனுமதித்துள்ளது. இதற்காக, துணை மதிப்பீடுகளில் 112.14 கோடி ரூபாய் மானியக் கோரிக்கை எண் 41, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் மறு நிதி ஒதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஊழியர்கள், ஓய்வூதியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய செலவினங்களை எதிர்கொள்வதற்காக, 188.41 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இதற்காக, துணை மதிப்பீடுகளில் 140.57 கோடி ரூபாய் மானியக் கோரிக்கை எண் 20, உயர் கல்வித் துறை என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் மறு நிதி ஒதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தை செயல்படுத்துவதற்காக, அரசு 198.37 கோடி ரூபாயை கூடுதலாக அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் மானியக் கோரிக்கை எண் 45, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019–2020 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

2020 மார்ச் 23] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

2019-2020 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	8	1,28,42	89,37
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	80,33	-	-
3	நீதி நிருவாகம்	110,37,36	-	-
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	33	5	35,89
5	வேளாண்மைத் துறை	72,40,99	17	-
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	223,10,02	34,64,71	38,59
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	39	50,00,05	-
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	2,08,51	-	-
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	56,69,12	3,01,62	-
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	108,26,90	-	31,11

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 மார்ச் 23

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	18	-	-
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	95,25,08	42,68,22	11,48
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	6,83,05	4	-
14	எரிசக்தித் துறை	9	154,88,58	2
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	6,03,56	10,94,81	-
16	நிதித் துறை	17	-	2
17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	10	29,99	-
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	4,69,24	-	-
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	526,87,50	3	25,00
20	உயர் கல்வித் துறை	71,75,83	22,67,69	140,56,99

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை	114,98,05	27	-
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	946,08,25	2,48,81	2
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	7	20,04,78	-
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	38,30,26	23,27,81	-
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்- நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	100,84,68	-	-
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	20	-	2
27	தொழில் துறை	18	26,14,98	43,01,34
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	13,84,64	-	-

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 மார்ச் 23

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
29	சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	27,41,35	30,64,41	40,29
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	22,54,42	2,89,18	-
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	11	-	-
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	19,97,55	4	47,83
33	சட்டத் துறை	28,30,18	-	-
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	16	6	2
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	20,26,62	5,49,97	-
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	13,26,75	-	71,47
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	7,36,29	-	-
38	பொதுத் துறை	67,61,37	-	1
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	25,84,35	17	40,49

2020 மார்ச் 23] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	48	47	-
41	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	175,94,92	16,64,90	44,90
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	12,77,55	-	-
43	பள்ளிக் கல்வித் துறை	1,537,52,56	2	-
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	63,88,48	2	-
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	412,44,58	29,63,89	-
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	24,90,38	-	19,48
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	4	-	-
48	போக்குவரத்துத் துறை	42,30,50	1	12,40
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	138,57,57	35,09	-
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	21	-	-

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	323,98,30	-	-
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	51,29,31	3,68,92	-
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	2,21,71	-	6,67
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	105,94,82	12	-
	பெருமொத்தம்	5,623,65,72	481,78,30	188,73,41

2. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி), 2019-2020, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019–2020 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

MESSAGE

"In pursuance of clause (2) of Article 205, read with clause (3) of Article 203 of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation, to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the financial year 2019–2020."

11. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி), 2019–2020, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019–2020 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.